ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2376/03 - 2024 මාර්තු මස 18 වැනි සඳුදා - 2024.03.18

2376/03 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MUL/LND/02/ACQ/24.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2013/D/520.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன பிரதேச செயலகப் பிரிவின் நெரலம்பிட்டிய கிராம அலுவலர் பிரிவிற்குரிய முலட்டியன மற்றும் நெரலம் பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ளதும் 2023.12.27 ஆந் திகதிய மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராமப் படத்தின் கடஸ்திரல் வரைபட இலக்கம் 820414 இல் வலய இலக்கம் 04, தாள் இலக்கம் 01 இல் காணித் துண்டு இலக்கங்கள் 1, 2 மற்றும் 3 என காட்டப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பின் சுமார் 1.8820 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

01. துண்டு இல. 1
காணியின் பெயர்: தில்தெனியபொத வத்த, கல்கடுவ பகுதி; விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தையும் மலசலகூடத்தையும் தேயிலை, கருவா உட்பட அடர்ந்த காட்டையும் கொண்டது; உரிமை கோருவோர்: மதுரட்ட பெருந் தோட்டத் துறை சங்கம்; விஸ்தீரணம்: 1.7235 ஹெக்டயார்.

02. துண்டு இல. 2
காணியின் பெயர்: தங்கலகேவத்த; விபரம்: சேனை, தேயிலை மற்றும் கருவா உட்பட கலப்புப் பயிர்ச்செய்கை உண்டு; உரிமை கோருவோர்: ஜே. ஜே. அபேகுணவர்தன; விஸ்தீரணம்: 0.1376 ஹெக்டயார்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

03. **துண்டு இல. 3**

காணியின் பெயர்: தங்கலகேவத்த; விபரம்: அடர்ந்த காடு; உரிமை கோருவோர்: ஜே. ஜே. அபேகுணவர்தன; விஸ்தீரணம்: 0.0209 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஆனி மாதம் 05 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு முலட்டியன பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப் பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விந்தியா டி. சமரக்கொடி,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
முலட்டியன.

பிரதேச செயலகம்,
முலட்டியன.
2024, மாச்சு 11.

EOG 03 - 0139